# காலி இடங்களிலெல்லாம் காய்கறிகள் ...!

**தண்ணியில்லா காட்டில் தளிர்விடும் இயற்கை**

தமிழ்நாட்டின் தண்ணியில்லா காடு எனப் பெயர் பெற்ற ராமநாதபுரத்தை இனி, தமிழகத்தின் இஸ்ரேல் என அழைத்தாலும் மிகையில்லை. அந்தளவுக்கு புதிய விவசாயத் தொழில்நுட்பங்கள் இம்மாவட்டத்தில் அதிகரித்து வருகின்றன. சாகுபடி பரப்பும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. வீடுகளைச் சுற்றியுள்ள காலி இடங்கள், மொட்டை மாடிகள், தென்னைக்கு ஊடுபயிர் என காய்கறி உற்பத்தி, இங்கே வேகமெடுத்திருக்கிறது. எப்படி நிகழ்ந்தது இப்படி ஒரு அற்புதம் ?

**100 இளைஞர்கள் !**

இவை அனைத்திற்கும் பின்னால் இருப்பது, மாவட்ட ஆட்சியர் நந்தகுமாரின் ஆர்வமும், முயற்சியும்தான். இயற்கை ஆர்வலரான நந்தகுமார், மாவட்ட ஆட்சியராக பொறுப்பேற்றதும் முள்காடுகளை அழித்து.. இயற்கை விவசாயப் பரப்பை அதிகப்படுத்தும் திட்டங்களை வகுக்கத் தொடங்கினார். இயற்கை விவசாயம் பற்றிய விழிப்பு உணர்வை விவசாயிகளிடத்தில் ஏற்படுத்தி, அவர்களைத் தற்சார்பு விவசாயிகளாக மாற்றுவதற்காக, இயற்கை விவசாய ஆலோசகர் ஏகாம்பரம் என்பவரை ஒப்பந்த ஊழியராகப் பணியமர்த்தினார். ‘பசுமை விகடன்’ இதழில் இடம்பெறும் முன்னோடி விவசாயிகள ஒவ்வொரு மாதமும் அழைத்து வந்து விவசாயிகளுக்கும், அதிகாரிகளுக்கும் மத்தியில் பேச வைத்தார். அதைத் தொடர்ந்து நூறு இளைஞர்களைத் தயார் செய்து, அவர்களுக்கு இயற்கை விவசாயப் பயிற்சி அளித்து, அவர்களைக் கொண்டு மாவட்டத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த நினைத்தார்.

**பசுமை விகடனின் பயிற்சி !**

இதற்காக, மாவட்ட நிர்வாகத்துடன் ‘பசுமை விகடன்’ இணைந்து, இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் தலைமையில் கடந்த ஆண்டு, இரண்டு நாள் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. பயிற்சியின் முடிவில் அனைவருக்கும் இரண்டாயிரம் ரூபாய் மதிப்பிலான காய்கறி விதைகள் இலவசமாக வழங்கப்பட்டன். இதில் பங்கேற்ற விவசாயிகள்தான், இன்று காய்கறி சாகுபடி செய்து, தினசரி வருமானம் பார்ப்பதோடு, மற்ற விவசாயிகளுக்கும் விழிப்பு உணர்வை ஏற்படுத்தி வருகிறார்கள்.

இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள், நந்தகுமார், சிவா சகோதரர்கள், மண்டபம் ஒன்றியம், வழுதூரைச் சேர்ந்த இந்த சகோதரர்களின் வீடு தேடிச் சென்ற போது, நம்மிடம் பேசிய நந்தகுமார், ஒரு காலத்தில விவசாயத்தின் மேல் வெறுப்புவந்து, கடை கண்ணி வைத்து பிழைத்துக் கொள்ளலாம் என்று போனவர்கள் இப்போது திரும்ப விவசாயத்திற்கே திரும்பி வருகிறார்கள். கிட்டத்தட்ட எல்லா வீடுகளிலும், காய்கறித் தோட்டம் இருக்கு. நம்மாழ்வார் ஐயா கொடுத்த பயிற்சியும், மாவட்ட நிர்வாகம் கொடுத்த விதையும்தான் இன்றைக்கு எங்களை சந்தோஷசமாக வைத்திருக்கு என்றார். வீட்டுக்குப் பின்புறம் இருந்த காய்கறித் தோட்டத்தைச் சுற்றிக்காட்டினார்.

**ஜீரோ பட்ஜெட் பந்தல் !**

இது மொத்தம் ஒரு ஏக்கர் 60 சென்ட் . இதில் ஒரு ஏக்கரில் தென்னை மரங்கள் இருக்கு. இந்த 60 சென்ட் இடத்தில் கொஞ்சம் மாங்கன்னுகளை நட்டிருக்கிறோம். மாவுக்கு ஊடுபயிராக காய்கறி விவசாயத்தை ஆரம்பித்திருக்கிறோம். எங்க பக்கத்தில் பனைமரங்களும், சீமைக்கருவேல் முள் செடிகளும் அதிகம். அதனால், முள் குச்சிகளை வெட்டி, பந்தல் போட்டு... கயிறுக்குப் பதிலாக பனை நார்களைப் பயன்படுத்தியே பந்தல் விவசாயமும் செய்கிறோம். ஆடு, மாடுகள் உள்ள வராமல் இருப்பதற்காக, பனங்கைகளை வைத்து வேலி போட்டிருக்கிறோம். இங்கு கிடைக்கும் பொருள்களையே பயன்படுத்திப்பதால், செலவு அதிகமில்லை. பீர்க்கன், பாகல், குறும்புடலை, மஞ்சள்பூசணி (பரங்கிக்காய்), கத்திரி, மிளகாய், தக்காளி என்று போட்டிருக்கிறோம். முப்பது சென்டில் அகத்தி, பொன்னாங்கண்ணி, வெந்தயக்கீரை, பாலக்கீரை, அரைக்கீரை, சிறுகீரை, வல்லாரைக்கீரை என்று போட்டிருக்கிறோம். வேலியில் 100 முருங்கை இருக்கு. கீரைகளுக்கு நடுவில் செடி அவரை, முள்ளங்கி இருக்கு, கொடுவள்ளிக்கீரை என்று ஒண்ணு இருக்கு. இது வறட்சியையும் நன்றாக தாங்கும். வீட்டுக்கு ஒரு செடி இருந்தால் போதும். ஒரு தடவை இதை சாப்பிட்டால் அப்பறம் விடவே மாட்டாங்க. அவ்வளவு சுவையாக இருக்கும். இது, வயிததுப் புண், வாய்ப்புண் மாதிரியான நோய்களுக்கு மருந்து என்று சொல்கிறார்கள். இதையும் போட்டிருக்கோம்.

**எங்களிடமே விதைப்பண்ணை!**

ஒரு செடியில் மகசூல் முடிந்ததும், பக்கத்திலேயே அதே விதையை நட்டுவிடுவோம். அதனால் சுழற்சி முறையில் காய்கள் இருந்து கொண்டே இருக்கும். பஞ்சகவ்யா, அமுதக்கரைசல், மூலிகைப் பூச்சிவிரட்டி, தேமோர் கரைசல் இதுகளைத்தான் பதினைந்து நாளைக்கு ஒரு முறை

மாற்றி மாற்றி தெளிக்கிறோம். வேற எந்த பண்டுதமும் பார்ப்பதில்லை. செடிகளுக்கு இடையில் பள்ளம் பறித்து இலை, தழைக் கழிவுகளைப் போடுவதால், அதெல்லாம் மட்கி உரமாகிவிடுகிறது. எல்லாமே நாட்டு ரகம் என்பதால் விதைகளை நாங்களே எடுத்து வைத்துக் கொள்வோம். அதனால் விதைக்கு அலைய வேண்டியதில்லை என்றார்.

**மனம் நிறைவு…! பணம் வரவு!**

தோட்டத்தில் இருந்து, தினமும் ஏதாவது மூன்று வகை காய்கள் கிடைத்துக் கொண்டே இருக்கு. தம்பி சிவா, ராமேஸ்வரத்தில் கடை வைத்திருக்கிறான். தினமும் காலையில் பத்து மணிக்குதான் மதுரையில் இருந்து ராமேஸ்வரத்துக்கு காய்கள் வரும். இப்போது எங்க தோட்டத்து காய்களை அதிகாலையிலேயே கடையில் கொண்டு போய் வைத்து விற்றுவிடுவோம். இப்போது கூட காய்கறிகளுடன் தம்பி அங்குதான் சென்றிருக்கிறான். இப்படி விற்பதால், தினமும் 500 ரூபாய் கணக்கில் மாதத்திற்கு 15 ஆயிரம் ரூபாய் கிடைக்கிறது. இதற்காக நாங்க செலவு செய்தது மூன்றாயிரம் ரூபாய்தான். குடும்ப ஆளுங்களே பராமரிப்பு, அறுவடை வேலையைச் செய்வதால்.. எல்லாமே லாபம்தான்.

**நம்மாழ்வாருக்கு நன்றி!**

எங்களிடம் 3 மாடு, 40 ஆடு. 50 நாட்டுக் கோழிகள் இருக்கு. இதுகளுடைய கழிவுகளைத் தான் செடிகளுக்கு உரமாக போடுகிறோம். இந்தத் தோட்டத்தில் கிடைக்கும் வருமானமே எங்க குடும்பத்துக்குப் போதுமானதாக இருக்கு. நல்லது, கெட்டது என்ற அவசர செலவுக்கு ஆடு, கோழிகளை விற்றுக் கொள்வோம். இப்போது நிறைய பேர், எங்களை மாதிரியே காய்கறி போட்டு, அன்றாடம் வருமானம் பார்த்துக்கிட்டு, சந்தோஷமாக இருக்காங்க. இதற்காக கலெக்டர் ஐயா, நம்மாழ்வார் ஐயா, பசுமை விகடன் இவங்களுக்கெல்லாம்தான் நாங்க நன்றி சொல்ல வேண்டும் என்றார்.

நிறைவாக மாவட்ட ஆட்சியர் நந்தகுமாரை சந்தித்தபோது, இந்த மாவட்டத்தோட காய்கறித் தேவையை இங்கும் விளையும் காய்கறிகளை வைத்தே ஈடுகட்ட வேண்டும் என்ற எண்ணத்தில்தான், காலி இடத்திலெல்லாம் காய்கறிகள் விளைய வைக்கும் திட்டத்தை கொண்டு வந்தோம். விவசாயிகள், வேளாண்மைத்துறை அதிகாரிகள், களப்பணியாளர்களுடைய முயற்சியால் இது நல்ல முறையில் இயங்கி கொண்டு இருக்கு என்றார் மகிழ்ச்சியுடன்.

தொடர்புகக்கு

நந்தகுமார் (விவசாயி)

செல்போன் : 94865 75172

**ஆதாரம் : பசுமை விகடன் வெளியீடு 10.03.2014 www.vikatan.com**